புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 – வெளியிடப்பட்டது ஜூன் 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

# குறுந்தொகையில் அறக்கோட்பாடுகள்

வே.சரளா.
தமிழ்த்துறைப் பேராசிரியர்,
கே.எம்.ஜி. கலை மற்றும் அறிவியல் கல்லூரி, குடியாத்தம்.

*ஆய்வுச்சுருக்கம் :*

*குறுந்தொகையில் அறக்கோட்பாடுகள் என்னும் இவ்வாய்வுக் கட்டுரையானது அறத்தை இருவகையாக ஆற்றலாம் என்று நம் முன்னோர்கள் வகுத்த நெறியில் துறவறத்தைக் காட்டிலும் இல்லறத்திலிருந்து ஆற்றும் அறமே சிறந்த அறமாகப் போற்றப்பட்டுள்ளது என்பதை சங்க இலக்கியங்களுள் ஒன்றான குறுந்தொகைப் பாடல்களில் இல்லறத்தில் ஆற்றவேண்டிய அறங்களாக இல்லற வாழ்வில் தலைவன் தலைவியின் குடும்பம் நடத்தும் பாங்கு எனும் தலைப்பில் தலைவி தலைவனுக்காக அமுது படைக்கும் நிகழ்வினையும், அதனை இனிதெனப் பாராட்டி மகிழும் தலைவனின் மனப்பாங்கினையும் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.*

*தலைவி தலைவன் மீது கொண்ட அன்பு அளவிடற்கரியது என்பது நிலத்தையும், கடலையும், வானத்தையும் எல்லையற்றதாக விளங்குவதாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது.*

*மகன்றில் பறவையை உதாரணமாகக் கொண்டு தலைவனது பிரிவை ஏற்க மறுக்கும் தலைவியின் நிலை இன்னதென்று படம்பிடித்துக்காட்டப்பட்டுள்ளது.*

*நல்ல ஆண்மகனுக்கு அழகு பொருள்தேடல். அவ்வாறு தான் தேடிய அப்பொருளைக் கொண்டே இல்லறக் கடமையாற்ற வேண்டும் ஆகையால் தலைவனுக்குரிய பொருள் தேடல் பிரிவை தலைவி ஏற்று ஆற்றியிருத்தல் வேண்டும் என்ற அறத்தை எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.*

*பலரறிய மணம் பேசும் உயர்ந்த அறத்தைக் கடைபிடித்துள்ளதை விளக்கப்பட்டுள்ளது.*

*தலைவியது கற்பின் திறம் மற்றும் விருந்தோம்பல் பண்பாடு போன்றவை இல்லறம் சார்ந்த அறநெறிக் கோட்பாடுகளாகச் சிலவற்றை மட்டும் குறுந்தலைப்புகளாகக் கொண்டு இவ்வாய்வானது எடுத்துரைக்கப்பட்டுள்ளது.*

*முன்னுரை :*

*சங்க இலக்கியங்கள் என்று போற்றப்படுவது எட்டுத்தொகையும் பத்துப்பாட்டுமாகும். இவ்விலக்கிய நூல்கள் பழந்தமிழரின் நற்பண்புகளையும் சமூக வாழ்வியலையும் எடுத்தியம்புகிறது. மொழிக்கு இலக்கணம் வகுத்த நம் முன்னோர்கள் மனிதன் எவ்வாறு வாழவேண்டும் என்று அறக்கோட்பாடுகளை வகுத்து செம்மையாக வாழ்ந்துள்ளமையை சங்கத்தமிழ் நூல்கள் மூலம் அறிய முடிகிறது.*

*சங்கத்தொகை நூல்களுள் - எட்டுத்தொகையில் ஒன்று குறுந்தொகை. இது 'நல்ல' என்னும் அடைமொழி கொண்டு சிறப்பிக்கப்படுகிறது. இந்நூல் தமிழர்களின் வாழ்வியலைப் படம் பிடிக்கும் பெட்டகமாக விளங்குகிறது. உவமையழகும் ஊன்றிப்படிப்பார்க்கு இன்பம் ததும்பச் செய்யும் இயல்புடையதாகவும் அமைந்துள்ளது. பு+ரிக்கோ தொகுத்த குறுந்தொகை வழியே சங்க காலத் தமிழர்களின்அறக்கோட்பாடுகளைக்காண்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.*

*இல்லற மாண்பு :*

*சங்க கால மக்கள் இல்லறத்தை நல்லறமாகப் போற்றிப் பேணி வளர்த்தமையை பல்வேறு பாடல்கள் மூலம் உணரமுடிகிறது. புதிதாகத் திருமணம் புரிந்த தலைவனும்*

தலைவியும் இல்லற வாழ்வை இனிதே துவக்குகிறார்கள். தலைவி செல்வர் வீட்டில் பிறந்து செழிப்புடன் வளர்ந்தவள். சமைத்தறியாதவள் இருப்பினும் தன் கையால் தலைவனுக்கு சமைத்துத் தர ஆவல் கொண்டாள்.

அதன் பொருட்டு தயிர் குழம்பைத் தயார் செய்கிறாள். தோய்ந்த கட்டித் தயிரைக் கையாற் பிசைந்து கையைக் கழுவாமல் தன் தூய ஆடையில் துடைத்துக் கொண்டாள். குழம்பைத் தாளிக்கும் போது ஏற்பட்ட புகை அவளது மையுண்ட கண்களை கலங்கச் செய்தது. இவ்வாறு அவள் அன்புடன் செய்த குழம்பைக் கணவனுக்கு இட்டாள். அவன் அது மிகவும் இனிதாக உள்ளதாகப் பாராட்டி உண்கிறான் அவள் முகம் மகிழ்ச்சியால் மலர்கிறது.

"முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்
கழுவுறு கலிங்கம் கழாஅது உடீ ,
குவளை உன்கண் குயப்புகை கமழக்
தான் துழந்து அட்ட தீம்புளிப் பாகர்
இனிதெனக் கணவன் உண்டலின்
நுண்ணிதின் மகிழ்ந்தன்று ஒண்ணுதல் முகனே" (கூடலூர் கிழார், குறுந். 167)

இந்நிகழ்வின் மூலம் இல்லாள் செய்த உணவின் தன்மை எத்தகையதாயினும் அவள் அன்புடன் செய்ததால் அதனை இனிது என்று பாராட்டி மகிழும் தலைவனின் மனப்பாங்கையும் நற்பண்பையும் உணரமுடிகிறது.

கணவன் மனைவி இருவரும் ஒருவருக்கொருவர் எவ்வாறு அன்பு பூண்டு ஒழுக வேண்டும் என்ற நற்கருத்தை வலியுறுத்துவதாக இப்பாடல் அமைகிறது.

தலைவியின் அளப்பரிய அன்பு :

தலைவன் மீது தலைவி கொண்ட அளப்பரிய அன்பு அளவிட முடியாத ஒன்று என்பதை பின்வரும் பாடலால் உணரலாம்.

"நிலத்தினும் பெரிதே : வானினும் உயர்ந்தன்று:
நீரினும் ஆர்அள வின்றே –சாரல்
கருங்கோற் குறிஞ்சிப்பு+க் கொண்டு
பெருந்தேன் இழைக்கும் நாடனொடு நட்பே !
( தேவகுலத்தார், குறுந். 3)

மேலும் தலைவனைப் பிரிந்திருக்க நேர்ந்த தலைவி தன் ஆற்றாமையால் தோழியிடம் பின்வருமாறு கூறுகிறாள்.

"பூ இடைப் படினும் யாண்டுகழிந் தன்ன
நீர்உறை மகன்றிற் புணர்ச்சி போலப்
பிரிவுஅரிது ஆகிய தண்டாக் காமமோடு,
உடன்உயிர் போகுக தில்ல –கடன்அறிந்து ,
இருவேம் ஆகிய உலகத்து,
உருவேம் ஆகிய புன்மையாம் உயற்கே !"
(சிறைக்குடி ஆந்தையார், குறுந் .57)

அதாவது தமக்கு இடையே ஒரு பு+வினால் தடைபடும் நேரம் ஒரு நொடியானாலும் ஓர் ஆண்டு கழிந்தது போல துன்பத்தை உண்டாக்குவதாக உணர்ந்து வாழும் மகன்றிற் பறவையின் நிலைபோலத் தான் தலைவனைப் பிரிந்து வாடுவதாக கூறுகிறாள். மேலும் முன்பு இருவரும் ஒருயிராய் இருந்த நாங்கள் பிரிந்த போது உடல் வேறு உயிர் வேறாக பிரிந்து இருப்பதாக குறிப்பிடுகிறாள். இப்பாடலில் தலைவி தலைவன் மீது கொண்ட அன்பிற்கு மகன்றிற் பறவையை உவமையாக சுட்டுவது சிறப்பாகும்.

குறுந்தொகை வழியாக சங்க கால மக்கள் அகத்திலும் புறத்திலும் தன்னிகரில்லாத வகையில் வாழ்ந்துள்ளனர். குறிப்பாக காதல் வாழ்விலும் புரிதலுடன் விட்டுக் கொடுத்துப் போகும் மனப்பக்குவத்துடனும் இருந்ததை உணர முடிகிறது. மேலும் விருந்தோம்பல், பொருள் தேடுதல்,மணம் பேசுதல்,கற்பின் திண்மை,இல்லற மாண்பு போன்ற அறக்கோட்பாடுகளை வாழ்வியலோடு வகுத்து வாழ்ந்தனர் என்பதையும் அறியமுடிகிறது.

*வினையே ஆடவர்க்கு உயிரானமை :*

*வினையின்கண் தலைவியைப் பிரிந்து செல்ல தலைவன் முற்படுகிறான். இதனை அறிந்த தலைவி வருந்தி உடல் மெலிவுற்றாள். அவளைத் தேற்றும் நோக்கில் தோழி*

*"வினையே ஆடவர்க்கு உயிரே : வாள் நுதல்*
*மனைஉறை மகளிர்க்கு ஆடவர் உயிர்' என,*
*நமக்கு உரைத் தோரும் தாமே,*
*அழாஅல் - தோழி ! –அழுங்குவர் செலவே."*

*(பாலைபாடிய பெருங்கடுங்கோ,குறுந். 135)*

*பொருள் தேடிச் செல்லுதல் என்பது ஆண்களுக்கு உயிரைப்போன்றது. அவர்தம் இல்லக் கிழத்தியாகப் போகும் நீயும் அவருக்கு உயிர்போன்றவள். எனவே நீ வருத்தத்துடன் வாடி நின்றாள் அவர் வினையின்கண் செல்லும் எண்ணத்தைக் கைவிட்டு விடுவார். அதனால் நீ வருந்தி அழுவதால் கை விடுவாயாக அவர் வினையை வெற்றியுடன் முடித்துத் திரும்புவான் என்று கூறுகிறாள். தலைவியின் நலனைக் காட்டிலும் பொருள் பெரிதல்ல என்ற கொள்கையுடையவர்களாக ஆண்கள் அக்காலத்தில் காணப்பட்டனர் என்ற கருத்தை இங்கு அறியலாம்.*

*பொருள்வயிற் பிரிவைப் போற்றும் தலைவி :*

*நம் முன்னோர்கள் சேர்த்து வைத்த செல்வத்தைக் கொண்டு செலவு செய்பவர்களை குறுந்தொகை சாடுகிறது. தம் முன்னோர்களின் செல்வத்தை வைத்திருப்பவர்கள் செல்வந்தர்கள் என்று கருதமாட்டார்கள். தாமாக ஈட்டித் தொகுத்த செல்வத்தை இல்லாதவரது வாழ்க்கையானது வளமுடையதாக இருப்பினும் பிறரிடம் பொருள் வேண்டி இரத்தலைக் காட்டிலும் இழிவுடையதாகும் என்று தோழிக்கு தலைவி உரைப்பதாக அமைந்துள்ளது.*

*இல்லறம் பேணுதலில் தடை நிற்றல் கூடாது :*

*தலைவனும் தலைவியும் உடன்போக்கிலே தமரின் நீங்கிச் செல்கின்றபொழுது அவர்களைப் பாலை நிலத்து வழியிடையிலே கண்டவர்கள் இரங்கிச் செவிலித்தாயிடம் கூறும் முறையினை பின்வரும் பாடலால் உணரலாம்.*

*வில்லோன் காலன கழலே: தொடியோள்*
*மெல்லடி மேலன சிலம்பே : நல்லோர்*
*யார்கொல்? ஆளியர் தாமே –ஆரியர்*
*கயிறுஆடு பறையின், கால்பொரக் கலங்கி,*
*வாகை வெண்நெற்று ஒலிக்கும்*
*வேய்பயில் அழுவம் முன்னி யோரே.*

*(பெரும்பதுமனார், குறுந் .7)*

*உடன்போக்கிலே சென்ற தலைவனும் தலைவியும் சென்ற வழியின் ஏதத்தினைச் செவிலித் தாயிடம் கண்டோர் கூறினர். மேலும் அத்தலைமகனின் தோற்றத்தைக் குறிப்பிடுகையில் வில்லை உடையவனான அவன் காலிடத்தில் கழல்கள் அணிந்திருந்தான் என்று கூறுகையில் தலைவி வீரம் பொருந்திய ஆண்மகனுடன் தான் காதல் மணம் பொருந்தி உடன்போக்கில் சென்றாள் என்று எடுத்துரைக்கப்பட்டுள்ளது. தலைவியைக் குறிப்பிடுகையில் தோள்வளை உடையவளான அவளின் மென்மையான அளகளின் மேல் சிலம்புகள் ஒலித்தது என்றதனால் களவு வாழ்வில் இருந்தவள் இன்னும் கற்பு வாழ்வில் ஈடுபடவில்லை என்பதை எடுத்துக்காட்டி அவ்விருவரும் கற்பு வாழ்வில் ஈடுபட வேண்டுமென்று இறை கூட்டுவிக்க எடன்போக்கில் செல்பவர்களை இல்லறக் கடமையாற்ற இருப்பவர்களை தடுத்தல் கூடாது என்ற கருத்தை இங்கு அறியலாம்.*

*இன்பம் சார்ந்த அறநெறிகள் :*

*இன்பம் சார்ந்த அறநெறிகள் நீதி இலக்கியத்தைப்போலவே சங்க இலக்கியத்திலும் வெறும் எடல் இன்பம் பற்றி மட்டும் பேசவில்லை. ஆவற்றிற்கு மேலாக தலைவன் தலைவி உள்ளப் புணர்ச்சி சங்க இலக்கியம் முதன்மை தந்துள்ளது என்பதை*

யாயும் ஞாயும் யாரா கியரோ ?
எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர் ?
யானும் நீயும் எவ்வழி அறிதும் ?
செம்புலப் பெயல்நீர் போல
அன்புடை நெஞ்சம் தாம்கலந் தனவே.

( செம்புலப் பெயனீரார், குறுந் - 40 )

பலரறிய மணம் பேசுதல் :

தலைவியின் சுற்றத்தாரிடம் சென்று தலைவியைத் தனக்குரிய மனைவியாக மணம் பேச தலைமகன் தமருடன் வந்து சொல்லாடுகின்ற பொழுது வரைவினை மறுக்காது ஏற்பர் என்பது இன்றளவும் இவ்வழக்கம் நடைமுறையில் உள்ளது.

"அம்ம வாழி தோழி! –நம் ஊர்ப்
புறரிந்தோர்ப் புணர்ப்போர் இருந்தனர் கொல்லோ?
தண்டுடைக் கையர், வெண்தலைச் சிதவலர்
'நன்று நன்று' என்னும் மாக்களோடு
'இன்று பெரிது' என்னும், ஆங்கணது அவையே!"

(வெள்ளிவீதியார்,குறுந் .146)

இப்பாடலில் தலைவியானவள் தன்னைச் சார்ந்த கூட்டத்தார், தண்டைப் பிடித்த கையினர், வெள்ளிய தலைக்கண் துகிலை உடையவர்கள் தலைவனைச் சார்ந்த பெரியவர்களோடு வந்து மணம் பேசும்பொழுது 'எம் மகளின் மணம்பேசி வந்த இந்நாள் பெருமைக்குரிய நந்நாள்'. என்று கூறுவதன் மூலம் இருவீட்டாரும் தகுதியறிந்து மணம் பேசும் இயல்பினராக 'பலரறி மணமே திருமண உறவாக' ஏற்றிருந்தனர் என்ற அறக் கோட்பாட்டினை அறியலாம்.

தலைவியின் கற்பு மேம்பாடு :

பரத்தமை மேற்கொண்ட தலைவன், தலைவியின் மீது கொண்ட விருப்பத்தால் பரத்தமையை விட்டு தலைவியுடன் கூட தூதாக பாங்கனை விடுக்க தோழியோ தலைமகன் உணரும் விதமாக தூதாக வந்தவர்க்குத் தலைவியினது கற்பு மேம்பாட்டை எடுத்துரைப்பதை பின்வரும் பாடலால் உணரலாம்.

"தச்சன் செய்த சிறுமா வையம்,
ஊர்ந்து இன்புறாஅர் ஆயினும், கையின்
ஈர்த்துஇன் புறூஉம் இளையோர் போல,
உற்றுஇன் புறேஎம் ஆயினும், நற்றேர்ப்
பொய்கை ஊரன் கேண்மை
செய்துஇன் புற்றனெம்: செறிந்தன வளையே!

(தும்பிசேர்கீரன், குறுந்.61)

அதாவது தச்சனால் செய்யப்பெற்ற குதிரையோடு சேர்ந்த சிறுவண்டியினை ஏறிச்செலுத்தி இன்பமடையாத சிறார் அதனைத் கையால் இழுத்து இன்பமடைவதைப் போலத் தலைவனை மெய் பொருந்தத் தழுவி இன்பம் அடையோம் என்றாலும் யாமும் எம் உள்ளத்தே இன்புற்றதால் வளை செறிவுடன் அமைந்தன. காப்பு என்பது தற்காப்பு என்று குறிப்பிடப்பட்டாலும்,தலைவி தன் கற்பு மேம்பாட்டை விளக்கும் தன்மையை உணரமுடிகிறது.

இங்கு தலைவியினது கைவளை செறிவாக அமைந்ததைப்போல் தன் கற்பும் தவறாது ஒழுகினால் என கூறப்பட்டிருப்பதால் அக்கால மகளீர் தன் கற்பை ஒழுக்கத்துடன் காத்தனர் என்பது புலப்படுகிறது.

விருந்தோம்பல் பண்பாடு காத்தமை :

நம் இல்லம் நாடி வரும் விருந்தினர்களை அன்புடன் வரவேற்று உபசரிப்பது தமிழர் பண்பாடாகும். அவர்கள் அகம் மகிழ மனமுவந்து அமுது படைப்பதை கடமையாகப் போற்றினர். நெய்யோடு வெண்ணெய் அரிசியால் சமைத்த வெம்மையான சோற்றையும் ஏழு கலங்களில் இட்டு காக்கைக்கு வைப்பர். தலைவியின் துன்பத்தை நீக்க விருந்தினர் வருமாறு காக்கைக்கு உணவு வைத்தல் பழங்கால மரபாகும். அவ்வழக்கம் இன்றளவிலும் நடைமுறையில் உள்ளது.

"திண்தேர் நள்ளி கானத்து அண்டர்
பல்ஆ பயந்த நெய்யின், தொண்டி
முழுதுடன் விளைந்த வெண்ணெய் வெஞ்சோறு
எழுகலத்து ஏந்தினும் சிறிது –என் தோழி
பெருந்தோள் நெகிழ்த்த செல்லற்கு
விருந்துவரக் கரைந்த காக்கையது பலியே" (காக்கைப் பாடினியார், குறுந். 210)

எனும் பாடலால் விளங்குகிறது.

மேலும் கார்காலத் தொடக்கத்தில் குளிர்காற்று வீசும் வேலையில் பிச்சை கேட்டு வந்தவர்களுக்கு வெண்சோற்றுடன் செம்பு நிறைய வெந்நீரைத் தந்து உபசரித்துள்ளதை அறிய முடிகிறது.

"ஆசுஇல் தெருவின் ஆசுஆல் வியன்கடைச்
செந்நெல் அமலை வெண்மை வெள்இழுது
ஓர்இல் பிச்சை ஆர மாந்தி,
ஆற்சிர வெய்ய வெப்பத் தண்ணீர்
சேமச் செப்பிற் பெறீஇயரோ, நீயே –
'மின்னிடை நடுங்கும் கடைப்பெயல் வாடை,
எக்கால் வருவது ? ' என்றி:
அக்கால் வருவர், எம் காத லோரே: (ஓரிற் பிச்சையார், குறுந் . 277)

இக்காட்சியின் மூலம் வறிய ஒருவருக்கு இனிய அமுது தந்ததுடன் குளிர் நீங்கும் பொருட்டு வெந்நீர் பருகத் தந்துள்ளமையால் விருந்தினர்களை எங்ஙனம் உபசரிக்க வேண்டும் என்பதை நமக்குப் புலப்படுத்துவதாக அமைகிறது.

மேற்கோள்கள் :

ஓரிற் பிச்சையார், குறுந் . 277
காக்கைப் பாடினியார், குறுந். 210
கூடலூர் கிழார், குறுந். 167
சிறைக்குடி ஆந்தையார், குறுந் .57
செம்புலப் பெயனீரார், குறுந் - 40
தும்பிசேர்கீரன், குறுந்.61
தேவகுலத்தார், குறுந். 3
பாலைபாடிய பெருங்கடுங்கோ,குறுந். 135
பெரும்பதுமனார், குறுந் .7
வெள்ளிவீதியார்,குறுந் .146

ஆய்வுக்குப் பயன்படுத்திய நூல்கள் :


1. ஔவை. துரைசாமிப்பிள்ளை (உ.ஆ.,),குறுந்தொகை மூலமும் உரையும்.
   தமிழ்மணி பதிப்பகம். 2008, பதிப்பு - 1
2. புலியு+ர்க் கேசிகன் (உ.ஆ.,),குறுந்தொகை மூலமும் உரையும்.
   மெட்ரோபாலிட்டன் பதிப்பகம் - 1965, பதிப்பு -1.
3. சு.அ.இராமசாமி (உ.ஆ.,),குறுந்தொகை வசனம்
   உ.வே.சா. பதிப்பகம். 1941 ., பதிப்பு – 1
4. போ.வே.சோமசுந்தரனார் (உ.ஆ.,),குறுந்தொகை மூலமும் உரையும்.
   தமிழ்மணி பதிப்பகம். 2008, பதிப்பு – 1


********* ********* ********** ********* ********* ********** ********** **********